

ST. CATHERINE OF SWEDEN

# புனித ஸ்வீடன் கத்தரீன் (1331-1382)

இவள் சிறுமியாக இருக்கும்போது இவளுடைய தந்தை, பிரபு ஒருவருக்கு இவளை மணமுடித்துக் கொடுத்தார். கணவனும் மனைவியும் விரத்தராக வாழ்நது வந்தனர். தங்களை அடக்கி ஒடுக்குவதிலும், செபிப்பதிலும், அன்புச் செயல்கள் செய்வதிலும் ஒருவரையொருவர் ஊக்குவித்து வந்தனர். இயேசுவின் பாடுகள் மீது இவளுக்கு அதிக பக்தி உண்டு. உரோமை வேத சாட்சிகளின் திருப்பண்டங்களை இவள் சந்திக்க விரும்பியதற்காக உரோமைக்குச் சென்றாள். அங்கு இவளுடைய தாயான புனித பிரிஜிட் என்பவள் இறந்தாள். பின்னர் இவளுடைய தாய் இருந்த மடத்தின் தலைவியாக இவள் நியமிக்கப்பட்டாள். ஆன்மாவின் ஆறுதல்கள் என்னும் அழகிய நூலை எழுதினாள்.

**சிந்தனை:**

ஆண்டவர் பட்ட பாடுகள் மீது உண்மையான பக்தி இருக்குமானால் புலன்களை அடக்குவது நமக்கு எளிதாக இருக்கும். சிலுவைப்பாதை செபிக்கிறவர்கள் இதைக் கவனிப்பார்களாக.

**செபம்:**

ஆண்டவரே, உமது பாடுகள் மீது உண்மையான பக்தியை எங்களுக்குத் தாரும்.